***கவனிக்க.-*** *2019.05.10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* III, *பகுதி* II *மற்றும் பகுதி* III *பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2124 - 2019 මැයි මස 17 වැනි සිකුරාදා - 2019.05.17

*2124 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 118 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2019, யூன் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, மே மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

117-B81523-353 (2019/05)

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில்

(சிவில் நீதிமன்ற அதிகாரத்தை அமுல்படுத்துவதற்காக கொழும்பில் நடைபெறும்)

*கம்பனிகள் சட்டம் 270 (ஆ) 270 (இ) 270 (ஈ) மற்றும்/அல்லது 270 (உ) பிரிவுகளுடன் வாசிக்கப்பட வேண்டிய கம்பனிகள் சட்டத்தின் 272 மற்றும் 274 ஆம் பிரிவுகளின் கீழ் விண்ணப்பம் தொடர்பானது.*

*மத்தேகொட, பொல்கஸ்ஓவிட்ட வீதி, இல. 78/B இல் அமைந்துள்ள ஸ்டெபர்ட் ஓரியன்ட் (பிறைவட்) லிமிட்டட் தொடர்பானது*

வழக்கு இல.:
19/ 19 CO *மற்றும்*

*கம்பனிகள் சட்டம் 270 (ஆ) 270 (இ) 270 (ஈ) மற்றும்/அல்லது 270 (உ) பிரிவுகளுடன் வாசிக்கப்பட வேண்டிய கம்பனிகள் சட்டத்தின் 272 மற்றும் 274 ஆம் பிரிவுகளின் கீழ் ஸ்டெபர்ட் ஓரியன்ட் (பிறைவட்) லிமிட்டட் கம்பனியானது நீதிமன்றினால் கணிப்பீடு செய்து மூடிவிடுவதற்கான விண்ணப்பம் தொடர்பானது.*

*ஸ்டெபர்ட் ஓரியன்ட் (பிறைவட்) லிமிட்டட் இல. 78/B, பொல்கஸ்ஓவிட்ட வீதி, மத்தேகொட.*

*விண்ணப்பதாரர்*

*கொழும்பில் நடைபெறும் மேல் மாகாண (சிவில் நீதிமன்ற நியாயாதிக்கம் செலுத்தப்படும்) மேல் நீதிமன்றினால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஸ்டெபர்ட் ஓரியன்ட் (பிறைவட்) லிமிட்டட் கம்பனியானது, கணக்கீடுகளை ஒழுங்குபடுத்தி மூடிவிடுவதற்காக விண்ணப்பமொன்று 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் 03 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதெனவும், அவ்விண்ணப்பம் 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதி மேல் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படுவதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ளதெனவும், அவ்விண்ணப்பத்தின் தீர்மானம் தொடர்பில் உதவுவதற்காக எதிர்பார்க்கும் அக்கம்பனியின் ஏதேனும் கடன்காரர் அல்லது அங்கத்தவர் ஒருவர் அவ்வேளையில் அதற்காக தம் சட்டத்தரணி மூலம் தோற்றலாம் எனவும், தேவையான அக்கம்பனியின் கடன்காரரொருவருக்கு அல்லது அங்கத்தவரொருவருக்கு அதற்கான குறித்த கட்டணத்தைச் செலுத்திய பின்னர் கையொப்பமிடுபவரினால் விண்ணபத்தின் பிரதியொன்று வழங்கப்படுமென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கையொப்பமிட்டவர் :*
*சட்டத்தரணி,*
*சனத் விஜேவர்தன,*
*இல. 28, வில்சன் வீதி,*
*நீதிமன்ற வீதி, கொழும்பு - 12.*

**குறிப்பு**.- *அவ்விண்ணப்பமானது பரிசீலிக்கப்படும் வேளையில் தோற்றியிருப்பதற்காக எதிர்பார்க்கும் எவரேனும் அதற்கான தம் விருப்பத்தை எழுத்துருவில் மேற்படி சட்டத்தரணி சனத் விஜேவர்தனவிற்கு வழங்குதல் வேண்டும். அல்லது தபாலில் அனுப்புதல் வேண்டும். அறிவிப்பவரின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன், அதற்கு அந்நபரினால் அல்லது கம்பனியினால் அல்லது (இருப்பின்) அவரின் சட்டத்தரணியொருவரினால் கையொப்பமிடப்படல் வேண்டுமென்பதுடன், அது 2019 ஆம் ஆண்டு ஓகத்து 05 ஆந் திகதியன்று பிற்பகல் 6.00 மணிக்கு முன்னர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நபருக்குக் கிடைக்கக்கூடியவாறு ஒப்படைத்தல் வேண்டும். அல்லது தபாலில் அனுப்புவதானால் நேர காலத்துடன் தபாலில் சேர்த்தல் வேண்டும்.*

*சட்டத்தரணி, சனத் விஜேவர்தன,*
*இல. 28, வில்சன் வீதி,*
*நீதிமன்ற வீதி, கொழும்பு - 12.*

*05-399*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.